DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 338/2020** |
| Deposition of Witness for | : PW5 |
| Name | :சண்முகவேல் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 04.06.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 04 June 2026**.**

**எதிரி A2 ஆஜர். A1,A4 ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. A3 Died வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது செவல்குளத்தில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.5** ஆகும்.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**<u>அரசுதரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் போலிசார் விசாரணையில் கடந்த 21.09.2013–ம் தேதி மாலை 4.00 மணிக்கு நானும் எங்கள் ஊரை சேர்ந்த ராஜ் என்பவரும் அ.சா.1 தோட்டத்தில் அருகில் வந்தபோது, அங்கு வந்த குருவிகுளம் போலிசார் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்பகுதிகளை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நாங்கள் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் கூறிவிட்டு தற்போது எதிரிகளை வழக்கில் இருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.